புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# அருணகிரிநாதர் பட்டினத்தார் பாடல்களில் நிலையாமை

ஐ. ஆனந்த பாபு
முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதி நேரம்),
தமிழ்த்துறை, டாக்டர் என்.ஜி.பி. கலை மற்றும்
அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர்- 641048

த. சிவகுமார்,
நெறியாளர், உதவிப்பேராசிரியர்
தமிழ்த்துறை,
டாக்டர் என்.ஜி.பி. கலை மற்றும் அறிவியல்
கல்லூரி (தன்னாட்சி),

ஆய்வுச் சுருக்கம்

மனிதனாய் பிறந்து இல்லறம் கண்டு துறவறம் கொண்ட அருணகிரிநாதர் பட்டினத்தாரின் வாழ்க்கையும் பாடல்களையும்அப்பாடல்களின் மூலம் நிலைமைக் கருத்துக்களையும் ஐம்பொறிகளின் தீமைகளையும் ஒப்பிட்டு ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

கலைச்சொற்கள்

யாக்கை – உடல், நெறிவாசல் – ஐம்பொறிகள், பசை - ஈரம் ஐந்தடக்கால் – ஐம்பொறகள், ஆழமார்க்கண்டன் - தென்முகக் கடவுள், பன்பல் – வெண்பல், குருதி - இரத்தம்.

கருதுகோள்

உலகினில் மனிதர்கள் ஒவ்வொருவருக்குள்ளும் ஒருவித சக்தியையும் ஆற்றலையும் இறைவன் கொடுத்துள்ளான். அதனை வெளிக்கொண்டு வருவதன்மூலம் அவன் அழியாத புகழையும் பெருமையும் அடைகின்றான். இதற்கு எல்லாம் மனிதன் தன்னையே தேட வேண்டும். அழியாத புகழைப் பெற நிலையில்லாத உடல் உலகம் அழிவுப்பொருளை விட்டு அழியாத புகழைத் தரும் அறிவு மனத்தை அடையமுயற்சிக்க வேண்டும். நிலையிலாத உடலை நேசிக்கும் இம் மானிடரிடம் உடல் நிலையற்றது என்பதை உணர்த்துவதே இவ்வாய்வின்கருதுகோளாக அமைகின்றது.

ஆய்வின் அணுகுமுறை

அருணைகிரிநாதர் பாடல்களையும் பட்டினத்தார் பாடல்களையும்ஒப்பிடுசெய்வதால் ஒப்பிட்டுஆய்வு அணுகுமுறையும் பாடல்களை விளக்கிக்கூறும் இடத்தில் விளக்க முறைத் திறனாய்வும் பயன்படுத்தப் பட்டுள்ளது.

முன்னுரை

உலகம் இன்பம், துன்பம், வெறுப்பு, வெறுப்பு, மழை, வெப்பம்,ஒளி, இருள், அறிவு, அறியாமை, இன்பம், துன்பம், நன்மை, தீமை, வளர்ச்சி, தேய்வு என்று பலதன்மைகளை தனக்குள் கொண்டு விளங்குவது போல மனித வாழ்க்கையும் ஒரு தன்மையற்றதாய் பல தன்மைகளைக் கொண்டு விளங்குகின்றது. மனித வாழ்வில் இளமை, யாக்கை, செல்வம், உறவுகள் நிலையில்லாதவையாகக் காணப்படுகின்றன. இத்தகைய நிலையற்ற உலகினில் நிலைத்த அறங்களைச் செய்து இறைவனின் பாதமலர்களை அடைய முயற்சிப்பதே வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொள்ளவேண்டும் என்று முருக பக்தரான அருணகிரியும், சித்தரான பட்டினத்தாரும் கூறுகின்றனர். இவர்களின் வாழ்க்கையும் ஏறக்குறைய ஒன்றாகவும் தோன்றுகின்றன. அதுமட்டும் அல்லாது இவர்கள் வாழ்ந்த காலங்கள் வேறு வேறு எனினும் இறைவனை அடைய இவர்களின் அனுபவப் பாடல்கள் அதன் கருத்துக்கள் ஒன்றாகின்றன. அத்தகைய பாடல்களை ஒப்பிட்டு அறிவதாக இக்கட்டுரை அமைந்திடுகிறது.

*பட்டினத்தார் வரலாறு*

*கிபி.10ஆம் நூற்றாண்டில் பெரும் வணிகர் குலத்தில் அவதரித்தவர் பட்டினத்தார். பட்டினத்துபிள்ளை என்பது இவரது குடிப்பெயராகும். இவரது ஊர் சோழ வள நாட்டில் உள்ள கடல் சூழ்ந்த காவிரிப்பூம்பட்டினம் ஆகும்.இவர் வாணிபத்தில் சிறந்து பலர் போற்றும் வகையில் விளங்கினார். பெரும் செல்வராக வாழ்ந்த இவர் இல்லறம் இனிதே நடத்தி வந்தார். இல்லறத்தில் இவருக்கு குழந்தைபேறு இல்லை. இவரின் குறையினை தீர்க்க மருதூர் இறைவன் மருதவாணன் பெயரில் ஒரு அந்தணச் சிறுவனாக தோன்றினான். அவனைத் தன் பிள்ளையாகப் பாவித்து கடல் கலந்த வாணிகத்தை மேற்கொள்ளச் செய்தார். மருதவாணரும் வாணிபத்தைச் சிறப்புடன் நடத்தி திருவெண்காடர் மனநிறைவு எய்துமாறு செய்தார்.*

*ஒரு நாள் வாணிகத்தின் பொருட்டுக் கடல் தாண்டிச் சென்ற மகன் திரும்பி வரும்பொழுது கப்பல் நிறைய எருமுட்டைகளும், தவிட்டுமூட்டைகளும் நிரம்பி வர, கோபம் கொண்ட பட்டினத்தார் விரட்டி ஒன்றை எடுத்து வீச, அதிலிருந்து நவரத்தின, வைர, வைடூரிய, மாணிக்க மணிகள் வெளிப்பட்டன. தவிடெல்லாம் பொன்மணலாக மாறியது. வீட்டில் மகனைக் காணவில்லை. ஆனால் அவர் தந்ததாக மனைவி கொடுத்த பேழையினுள் காதற்ற ஒர் ஊசியும் ஒரு நூலும் இருந்தது.*

*" காதற்ற ஊசியும் வாராது கண்கடை வழிக்கே" [1]*

*என்று எழுதப்பட்ட ஓலைச்சுவடியும் இருக்க கண்டு உலகப் பற்றை வெறுத்துப் பட்டினத்தார் விழிப்புணர்வு அடைந்தார், என்பதை கூறுகின்றார்.*

*அருணகிரிநாதர்*

*"உண்ணாமுலை உமையாளொடும்*
*உடனாகிய வொருவன்*
*பெண்ணாகிய பெருமான்மலை*
*திருமாமணி திகழ*
*மண்ணார்ந்தன அருவித்திரள்*
*மழலைம்முழ வதிரும்*
*அண்ணாமலை தொழுவார்வினை*
*வழுவாவண்ணம் அறுமே" [2]*

*என நினைக்கும் முக்தியை தரும் திருவண்ணாமலை யில் கிபி.9 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் அருணகிரி. திருவண்ணாமலை இறைவனின் அருளினால் பிறந்தமையால் இவருக்கு இறைவனின் பெயரான 'அருணகிரி' என்ற பெயரினை பெற்றோர் இட்டனர்.*

*அருணகிரி பிறந்து வளர்ந்து சுமார் 18 வயதில் பல கணிகையரின் நட்பினைபெற்று சிற்றின்ப ஆசையில் திளைத்தார். தன் உடன் பிறந்த தமக்கையினால் திருமணம் செய்து இனிமையுடன் இல்லற வாழ்வினை நடத்தினார் என்ற போதும் மீண்டும் பொது மகளிருடன் பழகி அதனால் தனது பெரும் செல்வத்தை எல்லாம் இழந்தார். பொருள் இல்லாது போக அவர்களுக்கு கொடுப்பதற்கு மீண்டும் பொருளைத் தேடிச் சென்று தனது சிற்றின்ப ஆசையில் திளைத்தார். காலம் உருண்டோடினபின் உடல் தளர்ந்து நோய் வாய்ப்பட்டார். நோயின் தீவிரம் அதிகமாகி "தொழு நோய்" யாக மாறியது. மரகத மேனியாய் இருந்தவர் மற்றவர் மணம் கலங்கும் விகார உருவம் பெற்றார். அடக்க முடியாத பெண்ணாசையினால் மீண்டும் விலை மகளிரை தேடிச் சென்றார். அழகில் மயங்கிய மகளிர் அவரது உருவம் கண்டு வெறுத்தனர். பலராலும் வெறுக்கப்பட்ட பின் உண்மையை உணர்ந்து உயிர் துறக்க எண்ணினார். அருணை கோபுரம் மீது ஏறி உயிர் விட துணிந்து கோபுரத்தின் மேலிருந்து வீழுந்தவரை முருகன் தடுத்தாட்கொண்டு யோகநிலையை அடைந்து முருகனைக் காணும் வரம் பெற்றார். முருகன் அடியெடுத்துக் கொடுக்க அருணகிரி "திருப்புகழ்" பாடினார் என்பர்.*

*ஐம்பொறி தீமைகள்*

*மனித வாழ்வில் நாம் அடையும் துன்பத்திற்கு பெரிதும் காரணம் 'ஆசை'யே ஏதோ ஒரு பொருளின் மீது கொண்டுள்ள பற்று அதனை அடையும் வரை தொடர்ந்து வந்து கொண்டே இருக்கிறது. இத்தகைய பற்றுதலை பின்னாலில் துன்பமாக அமைகின்றது இதனை பழமொழியில், "அளவிற்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சாகும்" என்கின்றனர். உடல்*

உறுப்புகளான "கண், காது, மூக்கு, வாய், செவி" இவையினால் உண்டாகின்ற பேராசை தான் ஒருவனது வாழ்வை தலைகீழாக மாற்றுகின்றன இதற்கு அருணகிரியின் வாழ்வும் ஒரு சான்றாகின்றன. எனவே மனிதன் புலன் அடக்கத்தை கொள்ளுதல் வேண்டும். இதனையே பொதுமறையாம் வள்ளுவத்தில்,

" ஒருமைவுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்
ஏழுமையும் ஏமாப்பு உடைத்து" [3]

என்ற குறளில், ஆமையானது நீண்டகாலம் உயிர் வாழ்கின்றது. அதற்கு காரணம் அது தனக்கு துன்பம் வருகின்றபோது தனது ஐந்து உறுப்புகளை ஓட்டுனுள் மறைத்துக் கொள்கின்றது. மனிதனும் மனத்தால் ஐம்பொறிகளை அடக்கி வாழ்ந்தால் வாழ்வினில் எத்துணையான துன்பமும் வராது என்கிறார். இதனையே அருணகிரியும் தமது பாடல்களில் பல இடங்களில் எடுத்துரைக்கின்றார்.

"அவ்வுடலின் நின்று உயிர்ப்ப, ஐம்பொறிகள் தாம் கிடப்பச்
செவ்விதின் அவ்வுடலில் சென்று அடங்கி -- அவ்வுடலில்
வேறொன்று கொண்டு விளையாடி மீண்டு அதனை
மாறல் உடல் நீ யல்லை மற்று." [4]

என்னும் அடிகளில் உடல் என்னும் கூட்டில் ஐம்பொறிகள் ஐந்து விதமான ஆசைகளை தேடி அலைகின்றது. அதனை அடக்கும் மனத்தை பெற்ற ஒருவன் ஞானி ஆகின்றான் இதனை சிவஞான போதம் எட்டாம் சூத்திரத்தில்,

"ஐம்பொறியின் அல்லவை எனும் அந்தர சிவனை
ஐம்பொறியை விட்டு அங்க அணை சகலன்- ஐம்பொறியின்
நீங்கான்; நீர்பாசி போல் நீங்கும்மல கன்மம்வரின்
நீங்கானை நீங்க் நினைந்து." [5]

என்ற பாடலடியில் உடலின் ஐந்து உறுப்புகளை அடக்காவிட்டால் அதனால் உயிர் போகும் துன்பம் உண்டாகும். ஐம்பொறி கலக்கத்தால் வரும் துன்பத்தை அடையாமல் சிவனை மனமே இல்லையேல் நீர் பாசி அலைவதுபோன்று ஆசை அலைந்து துன்பம் உண்டாகும் என்கிறது சிவஞானபோதம்.

"நெறிவாசல் தானேயாய் நின்றானை, ஐந்து
பொறிவாசல் போர்க்கதவம் சார்த்தி, - அறிவானாம்
ஆலமர நீழல் அறம்நால்வர்க் கன்றுரைத்த,
ஆலமமர் கண்டத் தரன். " [6]

விஷத்தைக் கக்கும் கொடிய பாம்பினைப் போன்றது ஐம்பொறிகள். அதனை வலிமையான மனத்தால் அடக்கி இறைவனை வணங்குபவர் திருமாலின் பூரண அருளைப் பெறுகின்றார் என்று இயம்புகின்றார் பொய்கையாழ்வார். மேலும், இறைவனை அடைய மறையவர் செய்யும் வேள்வியினைப் போன்றது ஐந்துஉறுப்புகள் அவைகளை இறைவனையே எண்ணுதல் வேண்டும். இதனால் அவ்வுடல் புனிதம் அடைந்து இறையின்பத்தை உணரும் என்கிறார்.

"செவிவாய்கண் மூக்குடலென் றைம்புலனும் செந்தீ
புவிகால்நீர் விண்பூதம் ஐந்தும் - அவியாத
ஞானமும் வேள்வியும் நல்லறமும் என்பரே
ஏனமாய் நின்றார்க் கியல்பு." [7]

உடல் நிலையாமை

அருணகிரிநாதர் தான் அனுபவித்த துன்பங்களை தமது பாடல்களில் அநேக இடங்களில் எடுத்துரைக்கின்றார். எதனால் தான் சிற்றின்பத்தில் சிக்கி தவிக்க காரணமாக இருந்ததோ அந்த உடலை வெறுத்துப் பாடுகின்றார்.

"தொந்தி சரிய மயிரே வெளிறநிரை
தந்த மசைய முதுகே வளையஇதழ்
தொங்க வொருகை தடிமேல் வரமகளிர்
நகையாடி" [8]

இளமையான உடல், பலரும் விரும்பும் அழகான 'காளை' பருவ உடல். மங்கையின் மனம் விரும்பும் அழகான உடலானது, அம்மகளிர் வெறுக்கும் வகையில் உடல் தோல் சுருங்கி கருமை

*நிறமுடைய தலைமுடி உதிர்ந்து வெந்நிறமடைந்து நடக்கின்ற போது உடல் நடுங்க முதுகு வளைந்து இன்பம் பருகும் இதழ் தொங்கி கையில் ஒரு தடியுடன் (கைபிடுக்கம்பு) வீதியில் வரும் முதியவனை பெண்கள் நகைக்கின்றனர் என்கின்றார், அருணகிரிபெருமான். இதனையே பட்டிணத்தார் தமது பாடலில்,*

*"வளமையும் மாறி இளமையும் மாறி*
*வன்பல் விழுந்திருகண்கள் இருண்டு*
*வயது முதிர்ந்து நரைதிரை வந்து*
*வாதவிரோத குரோதமடைந்து*
*செங்கையில் ஓர் தடியும் ஆகியே"[9]*

*மங்கையர் மயங்கும் இளமை அழிந்து உடல் இளைத்து கண்பார்வையின்றி, நரையும், திரையும், முதுமை அடைந்து வாத நோயுடன் கையில் ஒரு தடி உண்டி நடந்து உடல் அழியும் என்கிறார் பட்டிணத்தார்.*

*"பசையற்ற வுடல்வற்ற வினைமுற்றி நடைநெட்டி*
*பறியக்கை சொறியப்பல் ... ... வெளியாகிப்*
*படலைக்கு விழிகெட்ட குருடுற்று மிகநெக்க*
*பழமுற்று நரைகொக்கி ... ... னிறமாகி*
*விசைபெற்று வருபித்தம் வளியைக்க ணிலைகெட்டு*
*மெலிவுற்று விரல்பற்று ... ... தடியோடே"[10]*

*உடலில் (ஈரம்) இரத்தம் வற்றி, உடல் சுருங்கி பற்கள் வெளியே தெரிய, கண்பார்வை இழந்து உடலின் நிறம் மாறி வாதம் பித்தம் நோய்களின் பிறப்பிடமாய் மாறி என் உடல் தடியோடு தன் நடந்து மரணம் ஏய்தும் உடல் அழிந்து போகும் என்றுரைக்கிறார் அருணகிரியார்*

*"தோல்திரைக ளாகிநடை யாகிகுரு டாகியிரு*
*கால்கள்தடு மாறிசெவி மாறிபசு பசாபதி*
*சூழ்கதிகள் மாறிசுக மாறூ தடி யேளுதிரி யுறுநிளிற்*
*சூலைசொறி யீளைவலி வாதமொடு நிரழிவு*
*சோகைகள மாலைசுர மோடுபிணி தூவிவிருமல்"[11]*
*"குருதி தோலி னால்மேவு குடிலி லேத மாமாவி*
*குலைய ஏம னாலேவி விடுகாலன்*
*கொடிய பாச மோர்சூல படையி னோடு கூசாத*
*கொடுமை நோய்கொ டேகோலி யெதிராமுன்"[12]*

*இரத்தம் நிரம்பி வழியும் தோலினால் மூடப்பட்ட ஒரு வகை குடில் போன்றது இவ்வுடல் அதையும் எமன் கொண்டு செல்வான் எனவே உடலை பிற சிற்றின்ப இம்சையை மறுத்து இறைவனின் பேரின்பத்தை நினைத்து வாழ வேண்டும் என மனிதருக்கு உரைக்கிறார் அருணகிரிநாதர்.*

*உடலை வெறுத்தல்*

*மனித வாழ்வினில் இன்ப துன்பத்திற்கு அவனே காரணமாகின்றான். அழியும் உடலினை மனிதன் எவ்வாறு பாதுகாத்தாலும் அவையாவும் பயனற்றது இதனால் தான் அருணகிரிசுவாமிகள் சிற்றின்பத்திலிருந்து இறையின்பத்தை உணர்ந்த பின்னர் உடலினை வெறுக்கின்றார். மேலும் இந்த உடல், மாயப்பை, காற்று வீடு என தமது பாடலில் எடுத்துரைக்கிறார்.*

*"தோலால் சுவர் வைத்து நாலாறு காலில் சுமத்தி இரு*
*காலால் எழுப்பி வளைமுதுகு ஓட்டி கைந் நாற்றிநரம்*
*பால் ஆர்க்கை இட்டு தசைகொண்டு மேய்ந்த அகம்பிரிந்தால்*
*வேலால் கிரி தொளைத்தோன் இருதாளன்றி வேறில்லையே."[13]*

*ஒரு வீட்டிற்கு எவ்வாறு நான்கு சுவர் பாதுகாப்பாக இருக்கின்றதோ அதுபோல மனித உடலானது தோல் - சுவர் கால் - அடிமட்டம் நரம்பு - கயிறு தசைகொண்டு வேய்ந்த கூரை தான் உடல் ஆகவே அதனை பெரிதாக எண்ணி வாழ வேண்டாம் என்கிறார். அருணைமகான் மேற்கண்ட பாடலுக்கு சான்றாக பட்டனத்து அடிகளின் பாடலில்*

*"ஊற்றைப் புன்தோல் உதிரக் கட்டளை*

நாற்றப் பாண்டம் – நான் முழத்து ஒன்பது
பீற்றல் துண்டம் – பேய்ச்சுரைத் தோட்டம்
அடலைப் பெரிய சுடலைத் திடருள்
ஆசைக் கயிற்றில் ஆடும் பம்பரம்"[14]

அருவெறுக்கும் புண் தோலை மூடிய பொருள் உதிரம் நிறைந்த நாற்றம்மிகும் பண்டம் இத்தகைய உடலுக்கு ஒன்பது வாயில் எதற்கும் உதவாத சுரைக்கொடி போன்ற தோட்டம் என உடலை வெறுத்து எடுத்துரைக்கிறார் பட்டினத்தார். மேலும்

"கட்டு முறுப்பும் கரணமும் கொண்டுள்ளம்
இட்டதொரு பேரழைக்க என்னென்றாங் - கொட்டி
அவனுளமா கில்லான் உளமவனா மாட்டா
தவனுளமா யல்லனுமாம் அங்கு."[15]

எலும்பு, நரம்பு முதலியவற்றால் கட்டப்பட்ட இவ்வுடம்பை ஐந்து உறுப்புகள் ஆளுகின்றன. மலம் சூழ்ந்த உடம்பானது எப்போதும் ஒரே நிலையில் இருப்பது இல்லை அழிந்து போகும் உடலை விட அழியாத (உள்ளம்) ஆன்மாவை அறிதல் வேண்டும் என்கிறது சிவஞானபோதம் எடுத்துக்காட்டு வெண்பா.

முடிவுரை

இவ்வுலகில் எதை நிலையானவை, எவை நிலையற்றவை என்பதையும், தன் வாழ்வில் உண்டான துன்பங்களையும் அனுபவத்தையும் தமது பாடல்கள் வழியே இன்றைய மக்களுக்கு அறிவுரையாக பகிர்கின்றனர், அருணகிரியும் பட்டிணத்தாரும். மேலும் இவர்களின் பாடலின் மூலம் நிலையற்ற உடலை துன்பம் தரும் ஐம்பொறிகளையும் அதனை அடக்கி ஆளும் மனதினையும் படிப்பவர் கேட்பவர் வாழ்வினில் சிறு மாற்றம் நிச்சயம் உண்டாக்கும் என்பதை இக்கட்டுரையின் கருத்துக்களாக சொல்லப்பட்டுள்ளன.

சான்றின் விளக்கம்


1. தமிழ்ப்பிரியன், சித்தர் பாடல்கள், மூலமும் உரையும்,கற்பகம்புத்தகாலயம், சென்னை-17,பதிப்பு-2016,ப. எண்866
2. இந்து மத இணைப்பு விளக்கம்,சக்திப், பப்ளிஷிங்ஹோஸ்,சென்னை-21, ப. எண்126
3. ப. சுப்ரமணியன்(உ.ஆ), திருக்குறள் மூலமும் உரையும், இசையரசி பதிப்பகம்,திருச்சி. ப. எண்32
4. கு.வைத்தியநாதன், சிவஞான போதம் – தெளிவுரை,திருவாடுதுறை ஆதினம், திருவிடைமருதூர்,பதிப்பு-1997ப. எண்86
5. மேலது,ப. எண்215
6. ராமசுப்ரமணிய சர்மா(உ.ஆ),நாலாயிர திவ்வியப் பிரபந்தம், மூலமும்உரையும், கங்கைபுத்தக நிலையம், சென்னை-17, பதிப்பு-2007, ப. எண்859
7. மேலது, ப. எண்862
8. செங்கல்வராயபிள்ளை,அருணகிரிநாதர், திருப்புகழ் மூலமும் உரையும், சாரதா பதிப்பகம்,சென்னை-17, பதிப்பு-2016 ப. எண்120,121
9. தமிழ்ப்பிரியன், சித்தர் பாடல்கள், மூலமும் உரையும்,கற்பகம்புத்தகாலயம், சென்னை-17,பதிப்பு-2016 ப. எண்880
10. செங்கல்வராயபிள்ளை,அருணகிரிநாதர் திருப்புகழ் தொகுதி-2, சாரதா பதிப்பகம்,சென்னை-17, பதிப்பு-2016 ப.எண் 195
11. மேலது, ப. எண்666
12. மேலது, ப. எண்796
13. கிருபானந்தவாரியார்(உ.ஆ),கந்தர் அலங்காரம்,வானதி பதிப்பகம்,சென்னை-17பதிப்பு-2016, ப. எண்32
14. தமிழ்ப்பிரியன், சித்தர் பாடல்கள், மூலமும் உரையும்,கற்பகம்புத்தகாலயம், சென்னை-17,பதிப்பு-2016,ப. எண்676
15. கு.வைத்தியநாதன், சிவஞான போதம் – தெளிவுரை,திருவாடுதுறை ஆதினம், திருவிடைமருதூர், பதிப்பு-1997,ப. எண்47


********* ********* ********** ********* ********* ********** ********** **********